இடைநிலைத் தர ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தில் துவக்கத்தர பதவிகளில் பணியாற்றும் இடைநிலைத்தர ஆசிரியர்களின் பதவித் தரத்தை உயர்த்துவது குறித்த ஆணைகள் பின்னர் 1969-ம் ஆண்டில் திரும்பப் பெறப்பட்டனவா ?

(இ) இந்த ஆணையினுல் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) அவ்வாறு ரத்து ஆணை வெளியிட்டதற்கான காரணங்கள் யாவை ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : (*a*) Yes, Sir.

(*b*) Four.

(*c*) The Commissioner who gave the promotions of his own accord had no powers to do so. He had ordered these promotions without the approval of the Appointments Committee. The approval of the Appointments Committee is necessary before the Commissioner orders the promotions. So the Director of Rural Development ordered the stay of the proceedings of the Commissioner and instructed him to place the matter before the Appointments Committee.

THIRU G. SWAMINATHAN : May I know why this Commissioner without any powers has passed these orders ?

THE HON. THIRU P.U. SHANMUGHAM : I do not know. He did it of his own accord. He has been placed under suspension.

THIRU M. RAJAH IYER : May I know whether it makes any difference in the total number of teachers upgraded ? Since this is only a technical irregularity, I want to know whether it was set right later.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : It is purely a technical irregularity. Six teachers were allotted to that Union. They have been selected.

Mineral Sand

*6. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the quantum of the ore mixed sand exported to foreign countries during the last five years from the Coastal area of Manavalakurichi and Colachel of Kanyakumari District ;

(*b*) the amount of foreign exchange earned annually from this export ; and

(*c*) the proportion of the minerals found mixed in the sand so exported ?

[27th November 1970

உலோகப் பொருள்கள் கலந்த மணல்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல், மணவாளக்குரிச்சி கடற்கரையிலிருந்து உலோகப் பொருள்கள் கலந்த மணல் அயல் நாட்டிற்கு கடந்த 5 வருடங்களாக எவ்வளவு ஏற்றுமதியாகி இருக்கிறது ?

(இ) இந்த ஏற்றுமதியால் வருடத்திற்குக் கிடைக்கும் வெளி நாட்டு நாணயச் செலாவணி எவ்வளவு ?

(உ) ஏற்றுமதியாகும் மணலில் கலந்துள்ள உலோகங்களின் அளவு என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ), (இ) மற்றும் (உ) : அவைமுன் ஓர் அறிக்கை† வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணவாளக்குரிச்சி, குளச்சல் போன்ற பகுதிகளிலிருந்து ஆண்டொன்றுக்கு 40,000 டன் உலோகப் பொருள் ஏற்றுமதியாகிறதென்றும், ரூபாய் 32 லட்சத்திற்கு மேல் இதன்மூலம் அந்நிய நாணயச் செலாவணியாக நமது இந்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது என்றும் இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து தெரிகிறது. எனவே அந்தப் பகுதியிலேயே இந்த உலோகப் பொருள்களைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைக்கும் வகையில் அரசாங்கத்திடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இதுபற்றிய கேள்வி வந்த உடனேயே எனக்கும் இந்தச் சந்தேகம் வந்தது. எனவே இது பற்றி மத்திய சர்க்காரிடம் உடனடியாகத் தொடர்பு கொண்டிருக்கிறோம். 'அடாமிக் எனர்ஜி கமிஷன்' மூலமாக இந்தப் பொருள்களை வெளியே ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக அந்தப் பகுதியிலேயே ஏதாவது ஒரு தொழிற்சாலைக்குப் பயன்படுத்தலாமா என்று ஆராயும்படி நம் அரசின் சார்பில் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

Taxis

*7. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that taxis are not available at the queing place at the Central Station, Madras, during peak hours ; and

(*b*) whetherit is a fact that self-appointed intermediaries are charging the passengers after procuring taxis from nearby spots ?

† Printed as Appendix I